# கல்வெட்டு

திருவள்ளுவராண்டு 2031 (பிரமாதி ஆண்டு) பங்குனித் திங்கள்



காலாண்டிதழ் - 54 (2000, ஏப்ரல் திங்கள்) விலை ரூ. 1-50

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே...

பக்கம்

1. குன்னத்தூர் வீரசம்புகேசுவரர் கோயிலும் சம்புவராயர் கலைப்பாணியும்
— மா. சந்திரமூர்த்தி ... 1

2. வலங்கைமான் - பாடைக்காவடி வழிபாடு சிறப்புச் செய்திகள்
— கா. நெடுஞ்செழியன் ... 11

3. KAMMALAS
— A. Abdul Majeed ... 15

4. தீப்பாய்ந்தாள் அம்மன் - பூம்புகார்
— கோ. முத்துச்சாமி ... 25

5. குயவர் செப்பேடு
— செ. போசு ... 31

6. தட்டாம்பாளையக் கல்வெட்டுகள்
— ச. கிருஷ்ணமூர்த்தி ... 35

7. துளைப்பொன்
— முனைவர் சு. இராசகோபால் ... 37

### அட்டைப்பட விளக்கம்

திருவள்ளூர் மாவட்டம் பெருமாள்பட்டு கிராமத்தில் அண்மையில் கண்டறியப்பட்ட பல்லவர்காலச் சேட்டை சிற்பம் இது. பெருமிதத் தோற்றத்துடன் காதளவோடிய கண்களும், அரும்பு நகையும் கொண்டவளாக, நந்திதேவர் அக்கினிமாதா இருபுறமும் அமர்ந்திருக்கக், காக்கைக் கொடியும் துடைப்பமும் காட்டப்பட, சேட்டை எழிலாக அமர்ந்துள்ள இச்சிற்ப தொகுதி கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

1

# குன்னத்தூர் வீரசம்புகேசுவரர் கோயிலும் சம்புவராயர் கலைப்பாணியும்

**மா. சந்திரமூர்த்தி**
சிறப்புநிலைப் பதிவு அலுவலர்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம் போளூரிலிருந்து ஆரணி செல்லும் நெடுஞ்சாலையில் 2 ஆவது கிலோமீட்டரில் மேற்கே பிரியும் சாலையில் 1 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது குன்னத்தூர். இவ்வூரை அடையப் பேருந்துகள் உள.

குன்னத்தூர் என்ற பெயரில் இவ்வட்டத்தில் மற்றோர் ஊரும் உள்ளதால் அருகில் உள்ள இரண்டேரிப்பட்டு என்னும் ஊருடன் இணைத்து இரண்டேரிப்பட்டு குன்னத்தூர் என்றும் ஆர். குன்னத்தூர் என்று குறுக்கியும் வழங்குவர்.

ஊரின் நடுவே உள்ள சிவன்கோயில் வீர சம்புகேசுவரர் என்னும் பெயரில் கிழ்த்திசையை நோக்கி அமைந்துள்ளது. கருவறை, அர்த்தமண்டபம் அந்தராளம், மகாமண்டபம், முக மண்டபம், நந்திமண்டபம் சுப்பிரமணியர் சன்னதி, அம்மன் சன்னதி, சண்டிகேசுவரர் சன்னதி, திருச்சுற்று, திருமதில் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. மகாமண்டபத்தின் முன் உள்ள முகமண்டபம் மட்டும் தற்பொழுது முற்றிலும் கூரையின்றித் தரைமட்டமாகச் சிதைந்துள்ளது. இம் மண்டபத்தைத் தாங்கி நின்ற நான்கு தூண்கள் மட்டும் தற்பொழுது எஞ்சி நிற்கின்றன.

இக்கோயில் வீரசம்புவராயர் (கி. பி. 1306-17) காலத்தில் கட்டப்பட்டுள்ளது. எனவே இக்கோயிற் கல்வெட்டுகளில் "வீர சம்பீசுவரம்" எனக் குறிக்கப்படுகிறது. இறைவனின் பெயர்

வீரசம்பீஸ்வரம் உடைய நாயனார் ஆகும். தற்போது இறைவன் வீர சம்புகேசுவரர் என்ற பெயரில் அழைக்கப்படுகிறார். இறைவி ஸ்ரீமரதகவல்லி அம்பாள் சன்னதியினைக் கோயிற் திருச்சுற்றின் வடமேற்குப் பகுதியில் காணலாம்.

இறைவனது கருவறை சதுர வடிவுடையது. கருவறை நடுவே ருத்ர பாகத்துடன் கூடிய வட்டமான ஆவுடையாரைக் காணலாம். கருவறையின் விதானம், கோண வட்டம், சதுரவட்டம் இன்றிச் சமமாக மூடப்பட்டுள்ளது. கருவறை வாயிலின் இருபுறமும் எண்பட்டை வடிவுடைய இரு அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண் காலில் சதுரப்படையில் கொடிக் கருக்குகள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தூணின் உடல், இடை, தாடி, குடம், கலசம் யாவும் எண்பட்டை வடிவில் செதுக்கப் பட்டுள்ளன. அதன் மீது பத்மமும், பலகையும் அமைந்திருக்க, அதன் மேல் ஒரு தலைப் போதிகை அலங்கரிக்கிறது. போதிகைப் பூமுனை பருத்தி மொக்கை ஒத்துள்ளது. அவ்வாறு தூணின் கால் பகுதியில் நாகபந்தமும், அரசிலையும், கொடிக்கருக்கும் இங்கு சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத் தூணின் சட்டத் தலைகள், தாமரைப் பூமுனை யாவும் எளிமை யபகக் காட்டப்பட்டுள்ளன.

கருவறை புறச்சுவரின் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசை களில் முறையே தேவகோட்ட மாடங்கள் உள்ளன. இம் மாடங்கள் தொடக்கக் காலத்தில் தெய்வ உருவங்கள் இன்றி அமைக்கப்பட்டு இருந்திருத்தல் வேண்டும். தற்பொழுது அமைந் துள்ள தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா ஆகிய சிலைகள் அண்மைக் காலத்தவை.

இக்கோயிலின் அதிட்டானப் பகுதி உபானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை, கண்டம், வேதிகை ஆகிய பகுதிகளுடன் அமைந்துள்ளது. உபானத்தின் மேல் உள்ள ஜகதி அகலமாகவும், எளிமையாகவும் அமைந்துள்ளது. அவ்வாறு அதன் மேல் உள்ள முப்பட்டைக் குமுதம் அதற்கு ஏற்ற அளவோடு விளங்குகிறது. அதன் மேல் உள்ள கண்டத்தின் சதுரப்படைகளில் பூக்களும், கொடிக்கருக்குகளுமாக மாறி மாறி அமைந்துள்ளன.

வலையாத்தூர் ஆரணி போன்று எளிமையின்றி அர்த்த சித்திரங்கள் செதுக்கப்பட்டுள்ளதை இங்கு குறிப்பாகக் கண்டு களிக்கலாம். அடுத்து பட்டிகையின் மேல் உள்ள கண்டத்தின் சதுரப்படையிலும் கொடிக்கருக்குகள், பூவிதழ்களோடு சிறிப்பாயும் யாளிகள், ஆநிரை முன் கைத்தடியுடன் தோன்றும் ஆயன், அழகிய அணங்கின் கால்களைத் தூக்கிப் புணரும் ஆண்மகன் ஆகியோரின் அர்த்த சித்திரங்கள் தெற்குச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

அதிட்டானத்தின் மேல் உள்ள சுவர்ப் பகுதியின் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் கோட்டபஞ்சரங்கள் அலங்கரிக்கின்றன. அதன் பக்கச் சுவர்களில் பக்கத்திற்கு 6 அரைத்தூண்கள் வீதம் மூன்று திசைகளிலுமாக 18 அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண்களின் காலின் கீழுள்ள அசுவ பாதத்தின் சதுரப் படைகளில் நுட்பமாக கொடிக்கருக்குகள் செதுக்கப்பட்டுள்ளன. அசுவ பாதத்தின் மேல் முனைகளில் நாகபந்தங்கள் காட்டப்பட்டுள்ளன. தூணின் கால் முதல் குடம் வரை எண்பட்டைகள் செதுக்கப்பட்டுள்ளன. அதன் மேல் வேலைப்பாடு மிக்க விரிந்த பத்மமும், எளிய பலகையும், முத்தலைப் போதிகையும் உத்திரத்துடன் இணைந்து அணி செய்கின்றன. இத்தூண்கள் யாவும் கருவறை வாயிலை அலங்கரிக்கும் தூண்களைப் போன்ற அமைப்புடையவை.

குன்னத்தூர்க் கோயில் கோட்டப் பஞ்சரம் ஆரணிக் கோயிலில் உள்ள சம்புவராயர் காலத்துக் கோட்டப் பஞ்சரத்தை ஒத்து விளங்குகிறது. கோட்டத்தின் இரு பக்கங்களிலும் வேலைப்பாடு மிக்க அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண்களின் இடை மற்றும், கலசப்பகுதிகளில் மாவிலைத் தோரணங்களும், முத்து தாமங்களும் அலங்கரிக்கக் காணலாம். இதனுடைய கோட்டப் பஞ்சரத்தின் கூரை, இதழ்கள் அணி செய்யும் எழுதகம், கபோதகம், யாளம் ஆகிய மூன்று அங்கங்களோடு அமைய அதன் மேல் உள்ள கால் பகுதி எளிமையாகவும், அதன்மீது உள்ள நீண்ட சிகரம் 5 ஸ்தூபிகளுடனும், நாசிக் கூட்டுடனும் அலங்கரிக்கக் காணலாம். இது ஆரணிக் கோயிலை விடச் சற்று வேலைப்பாடு மிக்கதாகக் காணப்படினும் அக்கோயில் கோட்டப் பஞ்சரத்தின் அரைத்தூண்களின் சட்டத் தலைகளில் காட்டப்பட்டுள்ள பாயும் யாளிகள் இங்கு இல்லை.

கருவறையின் சுவர்ப்பகுதியில் மேற்கூரை அமைந்துள்ளது. இப்பகுதி தாமரை இதழ்கள் வரிசையாக அணி செய்யும் எழுதகம், கூடுகளுடன் கூடிய கபோதகம், யாளவரி ஆகிய அங்கங்களைப் பெற்று விளங்குகிறது. சம்புவராயர் காலத்துக் கோயிலில் கபோதகத்திற்கு கீழ் பூதவரியின்றி எழுதகமாக விளங்குவது குறிப்பிடத்தக்க கட்டடக் கலையின் அம்சமாகக் கருதலாம். அவ்வாறு கபோதகத்தின் கொடுங்கைப் பகுதியும் நீண்டில்லாமல் ஒடுங்கியுள்ளதைக் காணலாம். கொடுங்கையின் மேல்முனைப்பகுதியில் கொடிக்கருக்குகள் செதுக்கப்பட்டுள்ளன. கபோதகத்தின் இடையிடையே உள்ள கூடுகள் கீர்த்தி முகங்கள் இன்றிப் பூவேலைப்பாடும், கொடிக்கருக்குகள் நிறைந்ததாகவும் அமைந்துள்ளமை இச்கோயிலின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கபோதகத்தின் முகப்பில் கண்ணாடிச் சட்டங்கள் வரிசையாக அமைந்து வனப்பூட்டுகின்றன. கபோதகத்தின் மேல் உள்ள யாள வரிகளில் இடை இடையே குந்து சிம்மங்கள் காட்டப்படுகின்றன. இவ்வாறு குன்னத்தூர்க் கோயில் அதிட்டானம் முதல் கூரை வரை கற்றளியாகவும், அதன் மேல் விமானப் பகுதி செங்கல்லும், காரையும் கொண்டு கட்டப்பட்டும் உள்ளது. இக்கட்டட அமைப்பினைக் கொண்டு இதனை கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் (1300-25) சார்ந்ததாகக் கருதலாம். இக்கட்டடக் கலையில் பிற்காலச் சோழர்-பாண்டியர்களின் கலைத் தாக்கங்கள் இருப்பதை நன்கு அறியலாம்.

இக்கோயிற் கருவறை மேல் இரண்டு தள விமானம் வேசர சிகரத்துடன் அமைந்துள்ளது. இவ்விமானத்தளம் ஒவ்வொன்றும் கர்ணக்கூடு, சாலை ஆகிய பகுதிகளை மாறிமாறிக் கொண்டு விளங்குகிறது. இடையிடையே இரட்டைக் கால் பஞ்சரங்கள் அலங்கரிக்கின்றன.

முதல் தளத்தின் தென்திசையில் அலங்கரிக்கும் சாலையில் ஆடவல்லான், சிவகாமி மற்றும் மாணிக்கவாசகரின் சுதை உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேல் திசையில் நரசிங்கப் பெருமான் தூணைப் பிளந்து கொண்டு 12 கைகளுடன் தோன்றி இரணியனை மடியில் கிடத்தி அவன் குடலைக் கிழிக்கும் காட்சி மிக உக்கிரமாகச் சுதையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வலப்புறம் வணங்கி

நிற்கும் பிரகலாதனின் உருவமும், இடப்புறத்தில் சிங்கப் பெருமானின் தேவியும் காட்டப்பட்டுள்ளனர்.

வடதிசையில் உள்ள சாலையின் முன்புறம் நான்முகன் அமர்ந்த கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறார். பிரம்மாவின் நான்கு முகங்களும் மிகவும் கவனத்தோடும், கலையழகோடும் உருவாக்கப்பட்டுள்ளன. நான்முகனின் வலப்புறம் வீணை ஏந்திய முனிவரும், இடப்புறம் தாமரை இருக்கை மீது நாமகளும் இருந்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளனர்.

கீழ்த்திசையில் இடம்புரி விநாயகரின் அமர்ந்த நிலைச் சிற்பத் தினைக் காணலாம். சுதையிலான இவ்விநாயகரின் சிற்பம் வலையாத்தூர் சிவாலயத்தில் உள்ள கற்சிலையின் முகத்தோற்றத்தை ஒத்துள்ளதைக் காணலாம். யானைத் தலையை வெட்டி மானிட உடலில் இணைத்தாற் போன்று மிக இயற்கையாக இச்சிற்பப் படைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்தளத்தில் கர்ண கூடுகளின் முன்புறம் உள்ள வேதிப் படைகளில் மாட்டு முகமும், மானிட உடம்பும் கொண்ட நந்தீசுவரரும் அவரது பக்கங்களில் அமர்ந்த இரு நந்திகளின் சுதை உருவங்களும் மிக நேர்த்தியாகச் சுதையுருவில் வடிக்கப்பட் டுள்ளன. சம்புவராயர் காலத்துக் கல் நந்திகளின் சாயலையே கொண்டுள்ள இச்சுதை வடிவங்கள் சம்புவராயர் கலையை வெளிப் படுத்துகின்றன. சிற்பங்களில் ஆங்காங்கே சிற்சில சிதைவுகள் காணப்படினும் எஞ்சியுள்ள சிற்பங்கள் இழந்த சிதைவுகளை ஈடு செய்கின்றன.

இக்கோயில் இரண்டாம் தளத்தில் தென்திசையில் உமையுடன் கூடிய தட்சிணாமூர்த்தியின் சுதை வடிவைக் காணலாம். ஆலின் கீழ் வீராசனத்தில் அமர்ந்துள்ள தட்சிணாமூர்த்தியின் தலையை டர்பன் போல அலங்கரிக்கும் ஜடாபாரம் அணி செய்கிறது. இவரது நான்கு கைகளும் அடையாளம் காண முடியாதவாறு சிதைந் துள்ளது. இடப்புறத்தில் உமை இடது காலை மடித்து வலது காலைக் குத்திட்டு அமர்ந்துள்ளார். மேல் திசையில் அமர்ந்த உருவத்தையும், கிழ்த்திசையில் முருகனது சிற்ப வடிவினையும் கண்டு களிக்கலாம். அவ்வாறே கிரீவ கோட்டத்தில் தெற்கு, மேற்கு

வடக்கு, கிழக்கு ஆகிய திசைகளில் முறையே தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா மற்றும் முருகனது சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. கிரீவத்தின் வேதிப் படைகளில் அமர்ந்த நந்திகளும் அதன் முன்புறம் சங்கூதும் சிவகணங்களின் சுதை உருவங்களும் அழகு செய்கின்றன. கிரீவத்தைப் போன்று சிகரம் வட்ட வடிவுடையதாக அமைந்துள்ளது. சிகரத்தைச் சுற்றியுள்ள மகர நாசிகளில் பூத கணங்களின் முகங்கள் காட்டப்பட்டுள்ளன. சிகரத்தின் மேல் உள்ள மகாபத்மத்தின் நடுவே உலோகத்தால் ஆன ஸ்தூபி அலங்கரிக்கின்றது.

இத்திருக்கோயில் கற்றளியும், செங்கல்லால் ஆன விமானத் தளங்களும் சம்புவராயர் காலத்ததாக அறிய முடிகிறது. இது கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. இக்கோயில் கி.பி. 1306-க்கும் கி.பி. 1317-க்கும், இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்த வீரசம்பன் காலத்ததாக அறிய முடிகிறது. ஆகவே கல்வெட்டு குறிக்கும் வீரசம்பீசுவரம் என்ற இக்கோயில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சி செய்த சம்புவராயர் கலைக்குச் சிரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

கருவறையின் முன் உள்ள அர்த்தமண்டபம் சதுர வடிவில் தூண்கள் ஏதுமின்றி எளிமையாக விளங்குகிறது. அர்த்த மண்டபத்தின் புறச்சுவர், அதிட்டானம் யாவும் கருவறையை ஒத்த அமைப்புடையன. அவ்வாறு சுவரும், அரைத்தூண்களும் கோட்டப் பஞ்சரங்களும், பிரஸ்தரமும், கருவறையை ஒத்த அமைப்புடையன. அர்த்த மண்டபத் திருநிலை வாயிலின் நிலைக்கால்கள் பக்கங்களின் பூ இதழ்களோடும் பூவரிகளோடும் அலங்கரிக்கக் காணலாம். நிலைவாயில் பக்கங்களை வேலைப்பாடு மிக்க இரண்டு அரைத் தூண்கள் அலங்கரிக்கின்றன. இவையும் கருவறை வாயிலை அலங்கரிக்கும் தூண்களை ஒத்து எண்பட்டை வடிவுடன் காட்சியளிக்கிறது. இத்தூண்களின் கால் பகுதியில் வளைந்த கொடிக்கருக்குகளும், அதன் மேல் அரசிலையும் பக்கங்களில் நாகபந்தக் கட்டுகளும் அலங்கரிக்கக் காண்கிறோம். தூண்களின் சட்டதலைகள் பூமுனையுடன் வனப்பூட்டுகின்றன. அர்த்தமண்டபப் பகுதியும், கருவறையைப் போல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது என்பதனை இதன்

கட்டடக் கலை உறுதிப்படுத்துகின்றது. மேலும் சென்ற நூற்றாண்டில் கருவறை மற்றும் அர்த்த மண்டபப் பகுதிகளில் சிற்சில திருப்பணிகள் நடந்துள்ளதைக் காண முடிகிறது.

## அந்தராளம்

அந்தராளத்தின் முன்புறம் உள்ள பக்கச்சுவரில் தூண்கள் இன்றி இருபுறமும் முட்டிபந்தம் மட்டும் அலங்கரிக்கின்றது. அந்தராளத்தின் முன்புறம் சதுரமாகப் பரந்து விரிந்த மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தை நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இவை மேலும் கீழும் சதுரமாக அமைந்து இடையே உள்ள இடைப்பகுதி 16 பட்டை வடிவில் செதுக்கப்பட்டுள்ளது. இத்தூண்களின் மேல் பக்கங்களில் வனப்புடன் விரிந்த இரு தலைப் போதிகைகள் அலங்கரிக்கின்றன. இதன் மதலை, நாணுதல், வேலைப்பாடு மிக்கதாகக் காட்சியளிக்கிறது. பூமுனைகள் பருத்தி மொக்கை ஒத்தும், வாழைப்பூ மொக்கை ஒத்தும் சிறிதும் பெரிதுமாக அமைந்துள்ளன. இத்தூண்களின் சதுர படைகளின் இலைக்கருக்குகள் வட்டங்கள், வட்டங்களில் நடுவே விரிந்த பூக்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதன் மேற்கு மூலையில் உள்ள தூணில் குந்து சிம்மமும், இடம்புரி விநாயகரின் நின்ற கோலச் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன. வடகிழக்கு மூலையில் குந்து சிம்மமும், லிங்கத்திற்குப் பால் சுரந்து அதனை நாவால் நீவும் பசுவும் செதுக்கப்பட்டுள்ளது. மகாமண்டபத்தின் தென் மேற்கு மூலையில் துவார கணபதி, இடம்புரி விநாயகர், நாகர் ஆகிய உருவங்கள் வழிபாட்டில் உள்ளன.

## மகாமண்டபம்

மகாமண்டப வாயிற் பக்கங்களை அலங்கரிக்கும் யாளியின் வாயிலிருந்து வளைந்த துதிக்கை வெளிப்படும் நிலையில் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதன் பக்கங்களில் சங்கு ஊதும் பூதகணங்களின் உருவமும், சீறிப் பாய்ந்து நிற்கும் யாளியின் உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. மகாமண்டத்தின் முன்புறம் முகமண்டபம் இருந்ததற்கான தடயங்களோடு காட்சியளிக்கின்றது. இம்மண்டபத்தின் நடுவே நான்கு கல்தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இத்தூண்களும் மகாமண்டபத் தூண்களை

ஒத்த வேலைப்பாடு மிக்கதாகத் திகழ்கின்றன. இதன் சதுரப் படைகளில் பல் வகையான விரிந்த மலர்கள் செதுக்கப் பட்டுள்ளன.

இதன் மேல் உள்ள சதுரப்பட்டைகளில் சம்புவராயரின் சின்னமாக காளையின் உருவம் சந்திர பிறையோடு காட்டப் பட்டுள்ளது. செம்மாந்து நிற்கும் இக்காளை சின்னங்களை இக் கோயில் மகாமண்டபம் கிழக்குச் சுவர்களின் இருபுறங்களிலும் காணலாம். சம்புவராயர் காலத்து கட்டட மற்றும் கலைச் செல்வங்களை அடையாளம் காணவும், உறுதிப்படுத்தவும் இச் சின்னங்கள் நமக்கு மிகவும் துணை புரிகின்றன,

இக்காளைச் சின்னங்களைத் தாங்கி நிற்கும் முகமண்டபம் கால வெள்ளத்தில் சிதைந்து விட்டது. இருப்பினும் இம்மண்டபம் இருந்ததை உறுதிப்படுத்தும் வகையில் இங்கு நிறுத்தப்பட்டுள்ள நான்கு தூண்களும், அங்கு சிதறிக் கிடக்கும் கற்களும், வளைந்த கொடுங்கை பகுதியும் வரலாற்று சுவடுகளாக எஞ்சி நிற்கின்றன

**வடிவம்**

சிதைந்த முகமண்டபத்தின் முன்புறம் நந்தி மண்டபம் மற்றும் பலி பீடம் உள்ளன. மேடை மீது உள்ள நந்தி கழுத்தைச் சற்று வலப்புறம் சாய்த்துக் கருவறையை நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது. நந்தியின் கொண்டை மீது வீழ்ந் துள்ள மாலை சம்புவராயன் காலத்திய நந்திகளை அடையாளம் காணத் துணை புரிகிறது. இதன் தோற்றம் ஆடை அணி கலன்கள், அமர்ந்துள்ள கோலம் முகப்பொலிவு ஆகியன கொண்டு இதனை கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்த சம்புவராயர் கலையாகக் கருதலாம். இந்நந்தி சம்புவராயர் காலத்து நந்தி வடிவங்களுக்கு நல்லதொரு சான்றாக அமைந்து விளங்குகிறது.

**கணபதி**

இவ்வாலயத்திற்குரிய பரிவார தெய்வங்களில், ஒன்றான விநாயகரின் உருவம் தற்பொழுது கோயிலின் முகமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. இது வேலைப்பாடு மிக்க தாமரைப் பீடத்தில் இடது காலை மடித்து வலது காலை குத்திட்டு, நான்கு

கைகளுடன் அமர்ந்த கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது. இதன் மேற்கைகள் அங்குசத்தையும், பாசத்தையும், கடக முத்திரையில் பற்றியுள்ளன. கீழ் வலக்கை ஒடிந்த தந்தத்தையும் இடக்கை உருண்டையான மோதகத்தையும் கொண்டுள்ளன. துதிக்கை இடம்புரியாக வளைந்து இடக்கையில் உள்ள மோதகத்தைப் பற்றுகிறது. கரண்ட மகுடம், இரத்தினப்பட்டம், கண்டசரம், தோள்வளை, மணிவளை, முத்துப்புரிநூல், உதரபந்தம், இடைக் கச்சை, மணிக்கழல், பாதசரம் யாவும் விநாயகரை அலங்கரிக் கின்றன. இதன் இடது தோளை அலங்கரிக்கும் பூணூல், நாகயக் ஞோபவீதமாக அலங்கரிக்கின்றது. இதன் காலம் 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி சம்புவராயர் காலத்தியது.

## ஆறுமுகன்

இக்கோயிற் திருச்சுற்றின் மேற்குப் பகுதியில் கணபதியை அடுத்து ஆறுமுகனின் பரிவார ஆலயம் அமைந்துள்ளது. இதில் வனப்புடைய மயில் மீது ஆறுமுகப் பெருமான் ஆறு தலைகளும், பன்னிரு கைகளும் கொண்டு பாங்குறக் காட்சி அளிக்கிறார். ஆறுமுகனின் பக்கங்களில் வள்ளி, தெய்வயானை ஆகிய இரு தேவியரும் தாமரை மலரையும், நீலோத்பலத்தையும் தாங்கிய வண்ணம் காட்சியளிக்கின்றன. இச்சிற்பத் தொகுதியினை வீர சம்புவராயனின் காலத்துக் கலையாகக் கருதலாம். இம்மாவட்டத் தில் வலையாத்தூரில் உள்ள ஆறுமுகப் பெருமானை விட இச்சிற்பம் உருவில் பெரியதாகவும், வேலைப்பாடு மிக்கதாகவும் விளங்குகிறது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. சம்புவராயர் கலைக்குச் சான்றாக அமைந்துள்ளது. ஆறுமுகப் பெருமானின் பரிவார ஆலயம் பிற்காலத்தில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் திருச்சுற்றின் வடமேற்குப் பகுதியில் மரகதவல்லி அம்மன் சன்னதி கீழ்த்திசையை நோக்கி யுள்ளது. இது கருங்கல்லைக் கொண்டு அதன் மேல் உள்ள சுவரும், விமானமும் செங்கல்லையும், காரையும் கொண்டு எழுப்பப் பட்டுள்ளது. இதன் தேவகோட்டப் பஞ்சரங்கள் சிவாலயத்தை ஒத்தவை. ஆனால் கல் இன்றி அறுத்த செங்கல்லிலேயே மிக நுட்பமாக கொண்டு இதனை உருவாக்கியுள்ளனர். இதன் வாயில் படிகளை அலங்கரிக்கும் துதியாளியின் பக்கங்களில் சங்கூதும் பூதகணங்களின் சிற்பங்களைக் காணலாம்.

### சண்டிகேசுவரர்

கருவறையின் வடதிசையில் சண்டிகேசுவரரின் சிற்றாலயம் ஒன்று உள்ளது. இதில் உயர்ந்த பீடத்தின் மீது இடது காலை மடித்து வலது காலைத் தொங்கவிட்ட நிலையில் இரு கைகளுடன் சண்டிகேசுவரரின் அழகிய சிலையைக் காணலாம். இதன் வலக்கை மழுவை ஏந்தியுள்ளது. இடக்கை தொடை மீது உள்ளது. எளிமையும் எழிலும் மிக்க இவ்வுருவம் வீரசம்ப சம்புவராயர் காலத்தியது. கி. பி, 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது.

### பைரவர்

திருச்சுற்றின் வடகிழக்குச் சாலையில் பைரவரின் சிற்றாலயத்தைக் காணலாம், இவ்வாலயத்திற்குரிய பைரவரின் உருவம், தற்பொழுது மகாமண்டபத்தின் வடகிழக்குப் பகுதியில் வைக்கப் பட்டுள்ளது. இது நான்கு கைகளுடன் நாய் வாகனத்தோடு காட்சியளிக்கின்றது. உடுக்கை, திரிசூலம், கபாலம் ஆகிய ஆயுதங்களை ஏந்தி ஆடையற்ற திருவுருவாய் சிறிய உருவில் இச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சம்புவராயன் காலத்திய இச்சிலை கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. அவ்வாறு இக்கோயிலுக்குரிய சூரியன், சந்திரன் ஆகிய பரிவார தெய்வங்களின் உருவங்களும் அவற்றிற்குரிய சன்னதி சிதைந்து விடவே மகாமண்டபத்தில் வைத்துள்ளதை இன்றும் காணலாம் இக்கோயிலுக்குரிய மடப்பள்ளி சிதைந்துள்ளது. திருச்சுற்றின் வடகிழக்குப் பகுதியில் கோயில் கிணறு உள்ளது. இவற்றை யெல்லாம் உள்ளடக்கித் திருமதில் எழுப்பப்பட்டுள்ளது. இச் சுற்று மதிலும், கீழ்த்திசை வாயிலும், இடிபாடுகளோடு தற் பொழுது காட்சியளிக்கின்றன.

வீரசம்புவராயர் காலத்துக் கட்டட, சிற்பக்கலைச் செல்வங் களுக்கு இக்குன்னத்தூர்க் கோயில் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

# 2

# வலங்கைமான் - பாடைக்காவடி வழிபாடு சிறப்புச் செய்திகள்

கா. நெடுஞ்செழியன்
காப்பாட்சியர்

## இருப்பிடம்

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் நகரில் குடமுருட்டி ஆற்றங்கரையில் குடந்தை மாநகரிலிருந்து தெற்கே 9 கி.மீ. தொலைவில் வழிபாட்டுச் சிறப்புமிக்க மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. குருதலமான ஆலங்குடியிலிருந்து வடக்கே 7 கி. மீ. தொலைவில், கும்பகோணம்-மன்னார்குடி நெடுஞ் சாலையில் அமைந்துள்ளது. இக்கோயில் வரலாற்றுச் சிறப்புடைய தாகும்.

## வலங்கைமான் பெயர்க்காரணம்

மற்ற ஆலயங்களைப் போல் அல்லாமல் இத்தலத்தில் உள்ள சிவமூர்த்தத்திற்கு மட்டும் வலக்கையில் 'மான்' அமைந்திருப்பதால் வலங்கைமான் என்று சிவபக்தர்களாலும், மாரீச மாயமானை சீதாபிராட்டியின் வேண்டுகோளுக்கிணங்க விரட்டிச்சென்று இத்தலத்தில் வந்தபோது அம்மாயமான் வலப்புறத்தில் ஓடி மறைந்ததால் 'வலங்கைமான் என்று வைணவ பக்தர்களாலும் அழைக்கப்படுகின்றது.

## மகாமாரியம்மன்

கோயிற் கருவறையில் மாரியம்மன் என்றழைக்கப்படும் சிதளாதேவி அம்மன் வலதுகரங்கள் உடுக்கையும். கத்தியும், இடதுகரங்கள் பாசமும், அக்னிசட்டியும் பற்றியுள்ளன. தலையில்

5 தலை நாகம் படமெடுத்துக் குடைபிடிக்க, பக்தர்களுக்கு அருள் வழங்கும் ஒளிபடைத்த கண்களை உடையவளாகக் காட்சித் தருகிறாள்.

திருக்கோயில் மகாமண்டபத்தில் வடபகுதியில் தெற்குப் பார்த்தவாறு 5 சுதை உருவங்கள் உள்ளன. அவை இருளன், பேச்சியம்மன், மதுரைவீரன் மற்றும் அவனது தேவிமார்கள் இருவராவர். தென்புறத்தில் கிழக்குப் பார்த்தவாறு ஒரு விநாயகர் சிற்பமும் உள்ளது,

**காவடி**

காவடி என்ற சொல்லைக் காவு தடி எனப் பிரிக்கலாம். காவுதல் என்றால் ஒரு கழியின் இருபுறத்திலும் கட்டித் தொங்க விட்டுக் கொண்டு சுமத்தல் என்ற பொருள்படும். முருகனுக்கு மட்டும் உரிமையாக இருந்த இக்காவடி வழிபாடு காலப்போக்கில் அம்மனுக்கும் உரித்தாயிற்று.

**பாடைக்காவடி**

வலங்கைமான் மாரியம்மனுக்கு உகந்ததும் இக்கோயிலில் மிகச்சிறப்புடையதும் பக்தர்கள் அதிகமாக எடுக்கக்கூடியதும் பாடைக்காவடிதான். பாடைக்காவடி என்றாலே அது வலங்கை மான் தலத்தையே குறிக்கும். இங்கு நடைபெறும் பங்குனித் திருவிழாவில் எட்டாம் நாள் திருவிழா பாடைக்காவடித் திரு விழா என்று அழைக்கப்படுகின்றது.

பாடைக்காவடி என்று இறந்தவர் ஒருவரைப் பாடையில் வைத்து எப்படித் தூக்கிச் செல்வார்களோ அதைப்போல் உயிர் உள்ள ஒருவரைப் பாடையில் வைத்துத் தூக்கிக்கொண்டு மாரி யம்மன் கோயிலுக்குச் செல்வது. பாடைக்காவடிகள் எடுக்கும் வழக்கம் ஒரு சில அம்மன் கோயில்களில் உள்ளது என்றாலும் வலங்கைமான் மாரியம்மன் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பாடைக்காவடிகள் வருவது சிறப்புடையது ஆகும். அவ்வாறு வரும் பாடைக்காவடிகள் மட்டும் ஒருபுறத்தில் மலைபோல் குவிக்கப்பட்டிருக்கும். அப்பாடைக்காவடிகளில் உள்ள மூங்கில் களை ஏலம் விடுவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான ரூபாய் கோயிலுக்கு வருமானமாகக் கிடைக்கிறது.

## பாடைக்காவடி எடுப்பதற்கான காரணம்

சாதாரணமாக ஒரு வீட்டில் ஒருவருக்கு உடல்நிலை சரியில்லை என்றால் இம்மாரியம்மனிடம் வேண்டிக் கொள்கிறார்கள். குறிப்பாக உயிர்போகும் நிலையில் உள்ள ஒரு நோயாளியின் குடும்பத்தினர் மாரியம்மனிடம் வந்து 'மாரித்தாயே' . . உனக்குப் பாடைக்காவடி எடுக்கிறேன். அவருக்கு உயிர் பிச்சை தா என்று வேண்டிக்கொள்கின்றனர். அதற்கு நிவர்த்திக்கடனாக எடுப்பது தான் பாடைக்காவடி.

## பாடைக்காவடி எடுக்கும்முறை

இறந்தவர் ஒருவருக்கு என்னென்ன இறுதிக்கடன் செய்வார்களோ, அதேபோல் அவற்றையெல்லாம் செய்து பாடையில் வைத்து தூக்கிக்கொண்டு அம்மன் ஆலயத்திற்கு வருவது பாடைக் காவடி.

சான்றாக மூன்று அல்லது நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்த ஒரு தந்தை அல்லது தாயின் உடல்நலத்திற்காகப் பிள்ளைகள் வலங்கைமான் மாரியம்மனிடம் வேண்டிக்கொண்டார்கள் என்றால் அவர்களின் மூத்தமகன் வீட்டிலிருந்து பாடைக் காவடி கட்டுவார்கள். தந்தை அல்லது தாய் இறந்தால் எப்படி நடந்துகொள்வார்களோ அப்படி நடந்துகொள்வார்கள்.

நீர்மாலை எடுத்து நீராட்டுவார்கள். பின்னர் பாடையில் அவரைப் படுக்க வைப்பார்கள். பாடையில் படுக்க வைத்தவுடன் கால் கட்டைவிரல் இரண்டையும் கட்டிய பின்னர் வாய்க்கு அரிசிபோடுவார்கள். பிறகு வாயையும் கட்டி கண்கள் இரண்டிற்கும் சந்தனம் வைத்து நெற்றியில் காசு வைப்பார்கள், காசு வைத்த பின்னர் புதுத்துணி போட்டு மூடி, கயிற்றால் இறுக கட்டிவிடுவார்கள். இவ்வளவும் செய்து கொண்டிருக்கும் போது பாடைக்காவடியில் இருப்பவர் உண்மையிலேயே இறந்தது போல சுயநினைவை இழந்து விடுவார்.

மூத்தமகன் நெருப்புச்சட்டி எடுத்துக்கொண்டு முன்னே செல்லப், பின்னால் பாடைக்காவடியைத் தூக்கிக்கொண்டு வருவார்கள். அதற்கு முன்னர் தப்பு மற்றும் மேளங்கள் முழங்க வாணவேடிக்கைகளும், சிலம்பாட்டங்களும் நிகழும்.

பாடைக்காவடியைத் தூக்கிக் கொண்டு வருபவர்கள் மாரியம்மன் கோயிலை மும்முறை வலம் வந்த பின்னர் கோயிலின் முன் மண்டபத்தில் இறக்கி வைப்பார்கள். அப்போது கோயில் பூசாரி வந்து அப்பாடைக்காவடியில் இருப்பவர் மீது விபூதியை தெளிப்பார். விபூதியைத் தெளித்த பின்னர் தான் அப்பாடையில் உள்ளவருக்கு சுயநினைவு வரும்.

சிறு குழந்தையின் உயிருக்காக வேண்டிக் கொண்டவர்கள் குழந்தை இறந்தால் எப்படித் தொட்டில் கட்டித் தூக்குவார்களோ அதே போன்று தொட்டில் கட்டி அதில் அக்குழந்தையை இட்டுத் தூக்கிக்கொண்டு வலங்கைமான் மாரியம்மன் கோயிலுக்கு வருகிறார்கள்.

**விலாவுக்காவடி**

விலாவு என்பது மார்புப்புறத்திற்குக் கீழும், இடுப்பிற்கு மேலும் உள்ள உடலின் இரு பகுதிகளாகும். இந்த விலாவுப் பகுதியில் கட்டி இழுப்பதால்தான் இக்காவடி இப்பெயர் பெறுகின்றது. இங்குள்ள மக்கள் இதை 'சிலாவுக்காவடி என்று கூறுகின்றனர்.

இவ்வாறு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தஞ்சை, திருவாரூர், நாகை, திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டப் பகுதிகளிலிருந்து மாரியம்மன் கோயிலுக்கு இக்காவடிகளை எடுத்து வருகின்றனர்.

# 3

# KAMMALAS

A. ABDUL MAJEED
Director (I.C.)

A group of craftsmen who engaged in different types of occupation such as working on wood, stone, metal and gold are called Kammalas. Kammalas also bear other names such as "Tachchar", "Sirpiyar", "Karyakkarar", Kollar" and "Thattar" in order to indicate their occupation in connection with the materials they used for their crafts. These different classes of craftsmen belong to one and the same class of people the "Kammalas". Their existence in our country is established by our literature, inscriptions and numerous monuments, which they created in our country.

**Kammalas in the Literature**

Purananuru, the Sangam Literature refers one Carpenter (Tachchan), who is having the skill of making eight chariots per day as follows,

"வைகல் எண் டேர் செய்யுந் தச்சன்"[1]

Another poem portrays the skill of a smith as

"கருங்கைக் கொல்லன்"[2]

Ahananuru refers the smith (Kollan) and his instrument blower (Turutthi) as

...............கொல்லன்
விசைத்து வாங்கு துருத்தியின் வெய்ய உயிரா...[3]

Silappadikaram, one of the Kaviyas in Tamil portrays the existence of Kanjakkarar (வெண்கலம் செய்வோர்), Copper vessel makers (செம்பு செய்குநர்), Carpenter (மரங்கொல் தச்சர்), Black smiths (கொல்லர்), and Goldsmiths (பொன்செய்கொல்லர்) at Maruvurppakkam in Kaverippumpattinam[4]. The story of Silappadikaram itself is based on the plot of a goldsmith. This clearly indicates the role of the goldsmiths in the society.

Apart from these, there are innumerable references in our literature about Kammalas and their position, role and their importance in our ancient society.

**Inscriptions**

The inscriptions engraved in the temples give various names to the Kammalas such as Kammalar[5], Panchalattar[6], Anju Panchalattar[7], Iratakarar[8], Sthapati[9], Thattan[10], Perunthattan[11], Tachchan[12], Peruntachchan[13], Kollan[14] and Perunkollan[15].

**In Sculpture**

The services of the masons (Tachchans) who are responsible in constructing the temples and gopuras were appreciated and their portraits were installed in the temple precincts. One such example hails from Chidambaram temple. Four portraits of the masons are installed in the Northern Gopura of the Nataraja temple at Chidambaram for their service in renovating the Northern Gopura of 16th century A.D. This clearly indicates their architectural capacity and their value in the society.[16]

It is interesting to note that the instruments which are essential for Kammalas in making vessels and ornaments are carved below the figure of Gajalakshmi in a rectangular stone lying on the ground near a temple at Tirupalanam in Tanjore District. Twenty instruments are carved in the stone and very few instruments resemble the present day hammer, saw and chisel and others are unidentified. Stylistically speaking, the

figure of Gajalakshmi in the stone resembles the 16th century style. From this we may infer the availability of the instruments which were in use in 16th century A.D.

**Origin**

There are several stories in connection with the origin of the Kammalas and their fame. They are called as "Panchalar". This indicates the clear cut evidence of the close contact of the Kammalas with Panchala country. Greeks and Romans hailed expert artisans in Panchala country. Indian literatures call them as "Yavanas". Yavanas, who are expert in constructing buildings and engraving sculptures. Number of Yavanas served in the Tamil country. There is no doubt that the crafts of the Kammalas attained fame in contact with the Yavanas. The word " panchalar" retains this historical contact. It is worthy to note here that the Lexicon gives the name "Yavanar" to the Tachchar".

**Sankirna Jatiyar**

Kammalas are called Sankirna Jatiyar. Serveral crafts were allotted to the off spings of the parents of of inter caste marriages. These offsprings are called the Kammalas. They are considered as twice-born. The off-springs of the high caste male with low caste female are called "Anulomas" and the off springs of the high caste female with low caste male are called "pratilomas", according to the northern texts. This criteria of the division of the castes is accepted even during the period of Tolkappiyar.[17]

**Inscription on Clan and Craft**

An interesting inscription of 12th century A.D. gives a graphic account on masons. The educated Brahmins of Pandyakulantaka Chaturvedimangalam met and took decisions relating to the masons in connection with their clan, education and their crafts. This inscription

refers masons as Irathakarar and there are two clans known as 'Anulomas' and 'Pratilomas'. Anulomas are the off springs of the Brahmins, Kshatriyas, Vaisyas and Sutras of high caste males with low caste females and the pratilomas are the off springs of the high caste female with low caste male. It is considered that Anulomas and the Irathakarar are the off springs of the parents of intercaste marriages. Some texts refer Irathakarar as high caste and others refer them as low caste. Several texts refers them as Acharyas and they are authorised to study the science of horses, foundation on consecration (pratistha), the building of chariots, carpentry and building in general (Vastu).

**Eulogise (Meykirti) on Masons (Tachcharkal)**

It is interesting to hear that a separate eulogise for masons is found in an inscription of 1264 A.D. from Alangudi. This inscription mentions their origin, their decisions in connection with their social set up and their gifts to the temple of Apathsakaya perumal. "Moreover, this inscription mentions their native city as "Uttirapathi" and their separate flag known as "Makarakodi". Finally, this inscription mentions their six kinds of occupations and the four sections of Irathakaras such as Sthapati, Sutrakrahi, Vartaki and Tachchar.

**Their Service to the Community**

The great temple of Thanjavur, Thiruvaiyaru Lokamade vichuram temple and the Uttiramerur Sundaravaradaperumal temple are the creations of Rajarajaperuntachchan, Kaliyugarambai Peruntachchan and Paramesvaran. These temples are the soul of our culture, reflect the architectural sculptural beauties and the services of our ancient masons. Their services in creating these magnificient monuments are realised, appreciated and patronised by the royals and peoples. Rajaraja gifted lands to Virachola Kunjaramallan

alias Rajarajaperuntachchan for his service in creating the great temple at Thanjavur. Viracholakuncharamallan, the Tachchan named after Rajaraja indicates the royal status of the masons. In the same way Dantisaktividanki, queen of Rajaraja I gifted lands as "Thattarakkani" to one sakkadi Samudiyan alias Sembiyan Mahadevi perumtachchan for his service. Sembiyan Mahadevi, queen of Gandaraditya (949-57A.D.) made several gifts to the temples and she was responsible for constructing many temples in Tamil country. Sakkadi Samudaiyan, who named after this great queen give additional strength to masons for obtaining royal status.

**Their Gifts**

The Tamils played vital role in celebrating the festivals and maintaining the perpetual lamps in the temples by their gifts. These activities enhanced their divine inspiration. In this connection, it is useful to list out their gifts one by one.

Four classes of Iratakarar of Virudharajabhayankara Valanadu made provisions for celebrating festivals of Akkasalaikuttar to the Agatisvarar temple at Unaiyur in Pudukkottai in the reign of Jatavarman Sri Virapandyadeva (A.D. 1259)[18]

Kammalar (artisans) made gifts to the shrine of the goddess in the temple of Nalayira Isvaramudaiya Nayanar at Kallidaikuruchi in Tirunelveli District in the reign of Maravarman Kulasekhara pandya (1268-1308 A.D.)[19].

A carpenter gifted 25 sheeps for the maintenance of a lamp to the temple of Sundarapandya-Isvaradevar at Tiruchchulial. This provision was made in the reign of Rajasimha, contemporary of the Chola king Parantaka I [20].

Annamalai Thatchan, a Kammala of Salem constructed a podhigai (Pavilion) in Soundararaja perumal temple at Salem in the reign of Sri Sundarapandyadeva (1243 A.D.[21])

Tiruppattur inscription records the gift of cows for a lamp by a goldsmith of Gangaikondacholapuram to the temple of Pillaiyar at Tiruppidavur, a devadana and brahmadeya in Tiruppidavur nadu in the reign of Sri Kulottunga Choladeva[22]

Viranarayana perunkollan gifted 45 sheep for a lamp to the Tirumalavadi Mahadevar in the reign of Parantaka I (907-955)[23]. A Peruntachchan of Vallaipanriyur Sananayaka temple gifted 3 ma of land for a perpetual lamp to the Tiruvenkadudaiyar in the reign of Kulottunga III (1178-1216)[24]

**Taxes on Kammala**

Our ancient empires levied taxes on Kammalas for their crafts. The taxes on Kammalas were the main source of revenue to the empires. These taxes were utilised for the birthday celebration of the kings in the temples, for the offerings to the temples, for lamps and renovations to the temples. The taxes on Kammalas were termed as "Thattirai"[25] "Thattoli"[26] and "Thattarppattam"[27].

**Their Privileges**

There are three noteworthy inscriptions of Tribhuvana chakravartin Sri Konerinmaikondan at Karur[28], Modakkur[29] and Perur[30] in connection with the certain privileges granted to the Kammalas. The privileges granted are that in their marriages and funerals they are permitted to blow double conches and drums. They are permitted to wear sandals and plaster their houses with lime. It is wrong to think that these privileges are granted only to the Kammalas, but others also such as weavers and temple servants enjoyed these privileges with some restrictions.

**Their Present Conditions**

A field survey was conducted to enquire the present conditions of the descendents of this ancient artisans with

great enthusiasm. For the lack of time in this survey only one class of people *i.e.* "Thattans", who are living in Trichy were enquired to know the present conditions in the society.

**Occupations**

These people claim to be descended from Visvakarma the architect of the Gods. Visvakarma is said to have had five sons, named Manu, Maya, Silpa, Tvshtra and Daivagna. These five sons were the originators of five crafts, which their descendents severally follow. Those who engage in smithy work are called Manus, others concentrate in carpentry are called Mayas, stone carvers are called Tvshtras and those who engage in making jewellery are called Visvagnas or Daivagnas.

**Customs**

Their customs are somewhat resemble the customs of Brahmins. The male do not have mustache and they have tuft. They are in the habit of wearing the sacred thread.

**Marriage Ceremony**

Early marriage (Balyavivaha) was preferred in ancient days. The practice of early marriage is still prevailing in Tirunelveli District. Dowry is unknown to them and the marriages are performed only after the performance of sacred thread and the ear boring ceremoonies. Married women wear the tali known as 'Pottutali'.

**Funeral**

The dead are burried in a sitting posture and the cremation is sometimes resorted. On the first day the corpse is anointed with oil, and given a soapnut bath. On the third day five lingams are made with mud of which four are placed in the four corners at the spot where the corpse was burried and fifth is placed in the centre.

**Worship**

They worship mainly Goddess Kamakshi Amman and the female children are named after her. Disputes affecting the caste are settled before her temple.

**Priest**

There is separate priest to them for performing the ceremonies such as marriage, funeral, ear-boring and naming the children and they are called "Visvakarma Vadhyar.

**Sangam**

A sangam known as "Visvakarma Sammelanam" is functioning at Trichy in order to give advise, help, in connection with their social reforms.[31]

**Why to enjoy the basic privileges with restrictions**

On the basis of available inscriptions at Karur, Modakkur and Perur regarding the privileges granted to the Kammalas, we may ask why certain basic privileges were restricted to Kammalas earlier, though their services were essential to the socieity. We may infer, if we go through the inscriptions, the restrictions are not only imposed to Kammalas but also to others. Why this state of restrictions prevailed in fulfilling the basic needs? The clear cut answer to this question is the prevalence of the monarchy nature of our ancient empires and slavery in those days.

**Conclsion**

The day today life of the villages in ancient Tamilnadu depended on the services of the Kammalas especially in the field of agriculture, local industries, domestication, transportation and so on. The basic needs of the people, food, cloth and residence depend on the implements they made for carrying out the agricultural operations, for weaving the cloths and for building the residences. Their service

in making carts paved the way for local transportation. Their skill in creating the temples and scribing the records retains our religious cultural, poltiical and historical events of ancient days. In short, their service paved the way to the world to know our heritage. Practically, there is no movement in the villages and towns in ancient days without the services of the Kammalas.

*References*


1. Puram - 87
2. Puram - 180, Line 12
3. Puram - 224, Lines - 2-4
4. Silambu - 1:5, 28.31
5. A.R.No. 98 of 1907
6. A Topographical list of the inscriptions of the Madras Presidency. by V. Rangacharya, Vol. III. Cg. 692.
7. Ibid., Cg. 371.
8. Chronologicol list of inscriptions of Pudukkottai State No. 362
9. A.R.E. 1962-63
10. A.R.No. 52 of 1888
11. A.R.No. 216 of 1894
12. A.R.No. 1118 of 1888
13. A.R.No, 118 of 1896
14. A.R.No. 68 of 1894
15. A.R.No 96 - A of 1895
16. யாவரும் கேளிர்–டாக்டர் இரா. நாகசாமி
17. Puratinai Su. 75, Nachchinarkiniyar
18. Chronological list of inscriptions of Pudukkottai State No. 362

19. A.R.No. 98 of 1907
20. A.R.No. 425 of 1914
21. A.R.No. 58 of 1888
22. A.R.No. 48 of 1908
23. A.R.No. 96 of 1895
24. A.R.No. 118 of 1896
25. A.R.No. 50 of 1890
26. A.R.No. 14 of 1891
27. A.R.No. 25 of 1890
28. A.R.No. 66 of 1890
29. A.R.No. 151 of 1905
30. A.R.No. 562 of 1893
31. Informations are collected from Thiru Swaminatha Pattar at Ponmalaippatti.

*This article is based on Chapter XIII of "Yaavarum Kelir" by Dr. R. Nagaswamy.*

4

# தீப்பாய்ந்தாள் அம்மன் - பூம்புகார்

கோ. முத்துசாமி
கல்வெட்டாய்வாளர்

## அமைவிடம்

தொன்மை வரலாறு மிக்க பூம்புகாரில் பேருந்து நிலைத்திற்கு மேற்கே சுமார் ½ கி.மீ. தூரத்தில் சாலையின் வடக்குப் பக்கமாக செல்லும் தெருவில், ''தீப்பாய்ந்தாள் அம்மன் கோயில்'' அமைந்துள்ளது. இத்தெருவிற்கும் தீப்பாய்ந்தாள் அம்மன் கோயில் தெரு என்றே பெயர் வழங்கப்படுகிறது.

## கோயில் அமைப்பு

தீப்பாய்ந்தாள் கோயில் கடற்கரையை நோக்கியபடி கிழக்குப் பார்த்தவாறு அமைந்துள்ளது. இக்கோயில் கருங்கல்லோ செங்கல்லோ கொண்டு அமைக்கப்படவில்லை. இங்கு ஒரு பெரிய தழைத்த பூவரச மரம் அமைந்துள்ள பகுதியே அம்மன் கோயிலாக வழிபாட்டில் இருந்து வருகிறது. மரமானது ஒரு புற்று மேட்டில் அமைந்துள்ளது. இருபது சதுரமீட்டர் பரப்பில் இக்கோயில் அமைந்துள்ளது. விளக்கிடுவதற்கும் கற்பூரம் கொளுத்துவதற்கும் செங்கற்களால் சிறிய மாடம் ஒன்று கட்டியுள்ளார்கள். இப்பொழுதுள்ள மரத்திற்கு முன்பாகப் பழைய முதுமரம் ஒன்று இருந்து அது பட்டுப் போய்க் கீழே விழுந்து விட்டது. அது கடவுள் மரமாகக் கருதப்பட்டதால் யாரும் எடுத்துச் செல்லாமல் மக்கிப்போய் அம்மேட்டிலேயே கிடக்கிறது. தற்பொழுது இக்கோயிலைச் சுற்றி நான்கு பக்கமும் மீனவர்களின் குடியிருப்புகள் வந்துவிட்டன. ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை இப்பகுதி புஞ்சைத்தானியங்கள் பயிரிடப் படும் நிலமாக அமரர் திரு. கு. பக்கிரி படையாச்சி எனும்

வன்னிய சமூகத்தினரின் பரம்பரைச் சொத்தாக இருந்து வந்துள்ளது. அவர்கள் குடும்பத்தினர் முற்காலத்தில் இந்தத் தோட்டப் பகுதியில் சோளம், கம்பு, கேழ்வரகு, கத்திரி' வேர்க் கடலை மிளகாய் போன்ற 'பயிர்களைப் பயிரிட்டு வந்தமையும் தெரிய வருகிறது.

## தீப்பாய்ந்தாள் அம்மன் வரலாறு

1. மீனவர் பெண்மணி திருமதி. குஞ்சிம்மாள் (வயது 65) கூறிய கருத்து:-

முன்பு ஒரு காலத்தில் இப்பகுதியில் மிளகாய், கத்தரிக் கன்று களை நடுவதற்காக தோட்டத்தைச் செப்பனிட்டபோது பூமியில் பதிந்திருந்த ஓர் உருவத்தின் நெற்றியில் மண்வெட்டி பட்டு இரத்தம் வழிந்தது. இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற நிலத்துக் காரரின் கனவில் அன்று இரவு அம்மன் தோன்றித் தான் "தீப்பாய்ந்த அம்மன்" என்றும், என்னை மறக்காமல் படைய லிட்டு வழிபட்டால் உங்கள் குடும்பத்திற்கு நன்மைகள் உண்டாகும் என்றும் சொல்லி மறைந்தது. எனவே அப்பொழுது முதல் அந்த இடத்தில் மரம் நட்டு வருடந்தோறும் தீப்பாய்ந் தாளுக்குச் சிறப்பு வழிபாடு நாங்களும் செய்து வருகிறோம். இது வன்னிய இனத்தாருக்கு உரிய கோயிலாக இருந்தாலும், மீனவ இனத்தினரும் தொடர்ந்து வழிபாடு செய்து வருகிறோம். மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் பொழுது அதிகமாக வலையில் மீன் பட வேண்டும் என்று வேண்டிச் செல்வது வழக்கம். அவ்வாறு கிடைத்தால் வெள்ளி மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் மரத்தடியில் மாலைசார்த்திப் பொங்கலிட்டு படைப் போம். திருமணமாகாத பெண்களும், திருமணமாகிக் குழந்தைப் பேறு இல்லாத பெண்களும் வேண்டிக் கொண்டு மஞ்சள் துணியில் காசு முடிந்து இம்மரத்தின் கிளையில் கட்டுவதும், அம்மனுக்கு சிலை இல்லாததால் அம்மரத்தின் அடியில் புதுத்துணிகட்டி மரத் தடியில் பூசைப் பொருட்கள் வைத்துப் படைப்பதும் வழக்கமாக இருந்து வருகிறது என்று கூறினார்.

2. திரு. ப. சதாசிவ படையாச்சி வயது 75, கூறிய செய்திகள் வருமாறு:-

எங்கள் குடும்பம் பூம்புகாரிலுள்ள தொன்மையாக குடும்பங்களில் ஒன்றாகும். பல தலைமுறைகளாக நாங்கள் இப்பகுதியில் உள்ள புஞ்சை நிலத்தில் சோளம், கம்பு முதலியன பயிரிட்டுக் கொண்டு இங்கேயே இருந்து வருகிறோம். எனது பாட்டனார் திரு. குழந்தைவேலு படையாச்சி எனது தந்தை திரு. பக்கிரி படையாச்சி என்ற பெயர் உடையவர்கள். "சத்திரத்தார் குடும்பம்" என்ற பெயரும் எங்களுக்கு உண்டு. சேதுபாவா சத்திரம் பூம்புகாரில் கட்ட இடம் அளித்த குடும்பமாகும். பின்பு அதனைப் பரிபாலனமும் செய்து வந்துள்ளோம். தற்போது இடிந்துவிட்டது. சத்திரம் என்ற பேருந்து நிறுத்தம் பூம்புகாருக்கு முன்பாகத் தற்போதும் உள்ளது. எங்கள் வீட்டில் முற்காலத்தில் மாடுகளும், ஆடுகளும் மந்தையாக வளர்க்கப்பட்டன. எனவே இவ்வூரார் எங்கள் குடும்பத்தை, 'மாட்டுக்காரமூடு' என்று அழைத்து வருவது வழக்கமாக இருந்து வருகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எங்கள் மூதாதையர் வாழ்ந்த காலத்தில் இப்பகுதியில் வீட்டுத் தோட்டத்தில் கம்பு, சோளம் முதலியன பயிரிட்டிருந்தனர். ஒரு நாள் வீட்டில் திருமணமாகாத ஒரு கன்னிப் பெண்ணை மட்டும் தனியே விட்டுவிட்டு தந்தை, தாய், மகன் மூவரும் வெளியூர் திருவிழாவிற்குச் சென்று விட்டனர். விழா முடிந்ததும் பெற்றோர் இருவரும் வெளியூரில் உள்ள உறவினர் வீட்டில் தங்க வேண்டியதாயிற்று. எனவே, மகனை மட்டும் வீட்டில் விட்டு வந்த தங்கைக்குத் துணையாக இருக்க உடன் அனுப்பி வைத்தனர், அண்ணன் பூம்புகார் வீடு திரும்பும் பொழுது சூரியன் மறையும் மாலைப் பொழுதாகிவிட்டது. அப்பொழுது தங்கையானவள் சோளக் கொள்ளையில் நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த அண்ணனை சரியாக புரிந்து கொள்ளாமல் யாரோ புதிய ஆடவர் என்று கருதி சோளக் கொல்லையில் கீழே மறைந்தாள். இதனை அங்கிருந்து கண்ணுற்ற அண்ணன், வீட்டிற்கு வந்து, தங்கையை அழைத்து, நீ அங்கு யாருடன் பேசிக் கொண்டிருந்தாய் என்னைக் கண்டு ஏன் ஒளிந்தாய் என்று கோபத்துடன் கேட்க, தங்கையும் யாரோ புதிய ஆடவர் வருவதாக நினைத்ததால் ஒளிந்து கொண்டேன். ஆனால் வந்தது நீங்கள் தான் என்று இப்பொழுது தான் புரிந்து கொண்டேன் என்று விடை கூறினாள்.

அவள் பதிலை நம்பாத அண்ணன் வேறு யாரோ ஆடவனுடன் பேசிக் கொண்டிருந்ததாகத் தவறாக நினைத்து சந்தேகப்பட்டு மறுநாள் தமது பெற்றோர் வந்ததும் தமது தங்கை மீதுள்ள சந்தேகத்தை எடுத்துரைத்தான். பெற்றோர் மகளிடம் வினவ, அவள் தான் நேர்மையானவள்தான் என உறுதியாகக் கூறினாள். இப்படியே வாக்குவாதம் முற்றி நிலைமை ஊர் பஞ்சாயத்துக்குச் சென்றது. ஊர் பஞ்சாயத்தார் இருவரையும் விசாரித்து அண்ணனிடமே இதற்கு என்னதான் செய்ய வேண்டு மென்று மன்றாடுகிறார்கள். அவனோ தன் தங்கை பத்தினி யானால் சபையார் முன்னிலையில் தீமூட்டி அதில் புகுந்து வெளி வரவேண்டும் என்று கூறினான். தங்கையும் இதற்கு ஒப்புக் கொண்டு, "தீயில் பாய்ந்தாள் மறு பக்கத்திற்கு வரும்பொழுது மஞ்சள் புடவை கட்டிய சிலையாக நின்றாள்". தீப்பாய்ந்து தெய்வமாக மாறிய, அப்பெண் "தீப்பாய்ந்த அம்மன்" என்று சமூகத்தினரால் அழைக்கப்பட்டாள். அந்நிகழ்ச்சி நடந்த இடத்தில் தொன்று தொட்டு, பசுமரமாக தீப்பாய்ந்தாளம்மன் கோயில்' வழிபாட்டில் இருந்து வருகிறது என்று கூறினார்.

## வழிபாட்டு முறைகள்

இப்பரம்பரையில் வந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பூம்புகார், குந்திமேடு, திருக்கடையூர், நெய்தவாசல், கடைக்காடு, மேலப்பெரும்பள்ளம், தலைச்சங்காடு போன்ற ஊர்களில் குடி யிருந்து வருவதாகக் கூறுகிறார்கள். இக்குடும்பத்தினர் ஆண்டுக்கு ஒருமுறை தீப்பாய்ந்தாள் அம்மன் கோயிலில் ஒன்று கூடிப் பொங்கலிட்டு ஆடு (அல்லது) கோழி வெட்டிச் சமையல் செய்தும், அப்போது வாயிலும் இடுப்பிலும் ஈரத் துணியை கட்டிக் கொண்டு தீப்பாய்ந்தாளம்மன் முன் மாலை, பழம், அவல், பொரி கடலை, கள், சாராயம், சுருட்டு, அங்கு விளையும் தானியங்களின் கதிர்கள் இவற்றை வைத்துத் திருமணமாகாத குமரிப் பெண்ணை நீராடி வரச் செய்து அதனை முக்காடிட்டு அம்மன் முன்பாக நிறுத்தித் திரையிட்டு படைக்கச் செய்வதும் இன்றும் மரபாக உள்ளது என்று கூறினார். அவர் மேலும் கூறுகையில் பங்காளி களின் யார் வீட்டிலாவது தீட்டு ஏற்பட்டால் அவ்வாண்டு படையல் போடுவது நிறுத்தப்படும். தீப்பாய்ந்தாள் அம்மனைச் சுற்றி வீரன், பேச்சாயி, முனீஸ்வரன், காட்டேரி போன்ற எட்டு வகை

பரிவார தெய்வங்கள் சுடுமண்ணால் செய்து நிறுத்தப்பட்டிருந்தன. இவற்றுடன் யானை குதிரை, நாய் போன்ற சுடுமண் உருவங்களும் நிறுத்தப்பட்டிருந்தன. அவை தற்போது சிதைந்து ஓடுகள் மட்டுமே காணப்படுகின்றன.

எனவே தீப்பாய்ந்தாளம்மன் இக்குடும்பத்தாருக்கும், இப்பகுதி மக்களுக்கும் காவல் தெய்வமாக நின்று வருவதாக நம்புகின்றனர். இன்றும் மாட்டுப்பொங்கலன்று மாலையில் மாடு விரட்டவரும் ஊர்மக்கள் இங்கு ஒன்றுகூடி சூடம் ஏற்றி வணங்கி விட்டுத்தான் இங்கிருந்து மாடு விரட்டத் தொடங்குவது மரபாக உள்ளது.

## இப்பகுதியில் கிடைத்த சுடுமண் உருவங்கள்

இக்கோயிலுக்கு ஆய்வுக்கு சென்றபோது பூவரசமரத்தின் அடியில் உள்ள புற்று மேடையிலிருந்து பல அரிய சுடுமண் பொம்மைகளை இக்கட்டுரை ஆசிரியர் சேகரித்து உள்ளார். குழந்தை உருவமும், குமரிப் பெண் உருவமும் புத்தர் பெருமானின் தலைப் பகுதியும் இங்கு கிடைத்துள்ளன. ஒரு சில பொம்மைகளின் தலைப்பகுதி மட்டும் கிடைத்துள்ளது. ஒருசில வற்றின் இடுப்புக்குக் கீழ் உள்ள பகுதி மட்டும் கிடைத்துள்ளது. இச்சுடுமண் உருவங்கள் சில உள்ளீடு உடையனவாகவும் காணப்படுகின்றன. இவற்றை ஆய்வு செய்ததில் ஒருசில கி. பி. 3-ஆம் நூற்றாண்டுக்கு உரியனவாகவும், சில கி.பி. 10-ஆம் நூற்றாண்டின தாகவும் கருதப்படுகின்றன.

எனவே இப்பகுதியில் தீப்பாய்ந்தாள் அம்மன் கோயிலுக்கு முன்பாகவே சங்ககாலத்திலிருந்து சுடுமண் உருவங்கள் செய்து வைத்து வழிபாடு செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## தீப்பாய்ந்தாளம்மன் காலம்

இந்த அம்மன் கோயிலில் தற்பொழுது உள்ள பூவரச மரம் சுமார் 100 ஆண்டுகள் பழமை உடையதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இதற்கு முன்பாக முதுமரம் ஒன்று இருந்து அது பட்டுப்போய் விழுந்துள்ளது. அம்மரம் தோன்றுவதற்கு முன்பாகவே இவ்விடத்தில் முன்னோர்கள் காலத்தில் இந்த

தீப்பாய்ந்தாளம்மன் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. திரு.ப. சதாசிவ படையாட்சி அவர்கள் கூறிய கருத்துகளையும் ஒப்பு நோக்கினால் சுமார் 300 ஆண்டுகள் பழமையுடையதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தீப்பாய்ந்தாளம்மன் கோயிலுக்கு வடக்கில் அடுத்த தெருவில் மீனவர் குடியிருப்பில் "தோட்டாளம்மன் கோயில்" என்ற திறந்த வெளிக் கோயில் உள்ளது. இங்கு ஒரு வேப்பமரத்தடியில் பிற்காலச் சோழர் கலையில் பிள்ளையார், பைரவர், அம்மன் முதலிய உருவங்கள் காணப்படுகின்றன.

## தீப்பாய்ந்தாள் அம்மன் கோயில் உள்ள பிற இடங்கள்

பூம்புகாரில் காணப்படும் தீப்பாய்ந்தாள் அம்மன் கோயில் போன்றே பல இடங்களில் தீப்பாய்ந்தாளம்மன் கோயில் இருப்பது கட்டுரை ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திருக்கடையூர் அருகில் திருமயானம் செல்லும் வழியிலும்,

மயிலாடுதுறை கூறைநாடு காவிரிக்கரையிலும்,

மயிலாடுதுறை வட்டம், மாப்படுகை என்ற ஊரிலும்,

கும்பகோணம் நகரம் செல்வம் தியேட்டர் அருகிலும்,

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்குடி வட்டம் சேத்தியா தோப்பு என்ற ஊரில் முக்கிய சாலையின் அருகிலும் தீப்பாய்ந்தாளம்மனுக்குக் கோயில்கள் உள்ளன.

# 5

# குயவர் செப்பேடு

செ. போசு
காப்பாட்சியர்

மதுரை ஆரப்பாளையம் இராமலிங்கசுவாமிகள் மடாலயச் செப்புப் பட்டயம் ஒன்று அண்மையில் கண்டறியப்பட்டுப் படிக்கப் பட்டது. 1760-ஆம் ஆண்டு (சகாப்தம் 1682), கலியாண்டு 4861) திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோயில் பணிகள் தொடர்ந்து நடந்திட மண்டப வரியாகக் குயவர்கள் சக்கரத்திற்கு 5 பணம் கொடுத்துத் தர்மத்தைத் தொடர்ந்து நடத்தி வர வேண்டும் என்று மதுரை, ஆரப்பாளையம் வேளார் தெருவில் உள்ள இராமலிங்க சுவாமிகள் மடத்தில் உள்ள செப்புப் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பணிக்கு அட்டி சொல்லாமல் நடத்தி வரவேண்டும் என்றும் எழுதப்பட்டுள்ளது.

மதுராபுரி முதல் 56 தேசத்தார் உருத்திரப்பச் செட்டியார், அழகப்பச் செட்டியார், மகன் சின்னமுத்தழகி செட்டியார், பெரிய முத்தழகி செட்டியார், வெங்கடாத்திரி செட்டியார் உட்பட உடன் பட்டோரும், மேல் மதுராபுரியில் இருக்கும் சோமான் குயவரில் பாநதாங்கி வேளான், எட்டு உடைய வேளான், நிம்ம செட்டி வேளான், சொக்கநாத வைத்தியர் உட்பட உறவின் முறையார் அனைவரும் சேர்ந்து எழுதிக் கொடுத்த பட்டயம் இது.

குயவர்களுக்குச் சலுகைகளாகக் கொடுக்கப்பட்ட வருமானம் முழுவதையும் கோயில் மண்டபத்திருப்பணிக்குக் கொடுத்து விட வேண்டும் என்று செப்புப்பட்டயம் கூறுகிறது. செப்பேட்டின் உயரம் 28 செ.மீ. துளையுடன் கூடிய உயரம் 32 செ.மீ. அகலம் 19 செ.மீ, எடை 800 கிராம்.

**செப்பேட்டின் வாசகம்**

1) **சுபஷ்த்திறி** மன் மகா மண்டலெசுரன் அரிய
2) தழ விபாடணன் பாசைக்கித் தப்புவராய
3) கண்டன் மூவர்ராயிர கண்டன் கண்ட
4) நாடு கொண்டு கொண்டநாடு குடாதான்
5) பாண்டி மண்டலத் தபனாசாரியன் சோள
6) மண்டலப் பிரதாப னாசாரியன் தொண்ட
7) மண்டலச் சண்டப் பிறசண்டன் பூறுவ தெ
8) (ட்) தெட்சண பட்சம் யுத்கூதரயீளங் கொ
9) ங்குமலையாடி முள்பட சேர சோழன்
10) பாண்டிய மும்மண்டல முதல் எம்மண்
11) டலமுந் திறை கொண்டருழிய ராசாதிராசன்
12) ராசபரமெசுரன் ராசமாத்தாண்டன்
13) ராசகெம்பீரன் ராசகொலாகலப் பிர
14) லழகர் ராச மனொய்யங்கான் மன்னரில்
15) மன்னன் மன்னராட்டந் தவிள்த்தான் துட்
16) டரில்த் துட்டன் துட்ட நெட்டூரன் சம்மட்டி
17) நாறாயணன் வில்லுக்கு விசையன் சொல்லு
18) க்கு அரிச்சந்திரன் குடைக்கிக் கர்னண் பரிக்கி
19) நகுலன் வீராதிவீரன் வீரவிற்க்கிர மாதித்தன்
20) உக்கி(ர)மான வீரபத்திரன் கசரததுரக பதாதி
21) யளும் கொண்டருழிய அருச்சந்திர தேவர் ம
22) காராயர் திருசங்கு மகாராயர் அருச்சந்திர
23) ராயர் விருப்பரா[ர]யர் தேசதர்மகாராயர் தன்
24) மராயர் கிஷ்னராயர் புசபலராயர் பறாக்கிரம
25) ராயர் வீரநரசிங்கராயர் விருப்பாச்சிராயர்
26) மல்லிகாச்சின மகாராயர் பிறவுடதெவர்(ம)
27) காராயர் கெசப்பதிராயர் அசுபதிராயராயர்
28) நரபதி ராயர் யெருதிபம ராயர் அச்சுதராயர்
29) கொவிந்தராய சீரங்க ராயர் நாகமனாயக்கர்
30) விசுவநாதரர் முத்துக் கிஷ்ணப்ப னாயக்கர் முத்து
31) வீரப்பனாயக்கர் விரராகுவ நாயக்கர் திருமலை

32) நாக்கர்முத்து வீரப்ப நாயக்கர் சொக்கநாதர் நா
33) யக்கர் விசைய ரங்கக் கிஷ்ட்டிண முத்து விர
34) ச் சொக்கலிங்க நாயக்கர் காமாட்சியம்மன் வர
35) ப்பிரசாத் தரான ணாவணப்ப நாயக்கரய்யனவர்
36) கள் செங்கோல் நடத்தும் பிறிதிவிராச்சியங்
37) சாலிவாகன சகாப்பத்தம் ௲௬௱அ௰உ மெல்
38) கலியுக சாந்தம் ௪௲அ௱௬௰க க்கு மேல் செல்
39) ல்லா நின்ற விக்கிறம ஹூ காற்கிகை மீ ௨ உ௰௬
40) உ மதுராபுரி முதலன் பத்தாரு தேசத்தாரும் ருத்
41) திரப்ப செட்டியார் அழகப்ப செட்டியார் குமரன்
42) சின்ன முத்தழகிரி செட்டி பெரிய முத்தழகிரி செட்டி
43) வெங்கிடாத்திரி செட்டியாருள் பட்டாரு ஏம
44) ன் மதுராபுரியிலிருக்கும் சோமான் குசவரி
45) ல் பாநதாங்கி வெழான் ஒ எட்டு ஒடயர் வே
46) ளான் நிம்மா செட்டி வேளான் சொக்கநா
47) த வத்தியர் உள்பட உறவின் முரையார் சகல
48) சனங்களுக்கும் தற்ம சபால சாதனப் பட்டையம்
49) எழுதிக் கொடுத்தபடி திருப்பறங்கிரியில் திருப்
50) பணி கட்டி முகிப்பிக்கிற படியினாலே அந்தத்தி(ருப்)
51) பணிக்கி தங்கள் வளியில்க் குசவர் சருவ
52) த்திராளுக்கும் நமக்குண்டான வரியிரை யா தி
53) ந்தமும் விட்டு கொடுத்து சருவ மானுபம் பண்ணி
54) விச்சபடியிநாலெ தங்களுக்குள்ள வரி எல்லா
55) ம் திருப்பணிக்கிக் கொடுத்துக் கொண்டு மெலப்ப
56) டி மண்டப வரி நாலு தேசத்து உறவின் முரையா
57) ரன வரும் சக்கரத்துக்கு அஞ்சுபணம் குடுத்து சு
58) வாமி காரியத்துக்கு அட்டி சொல்லாமல் குடுத்து
59) நடத்து விப்பற(ா)கவும் மதுரபுரியில்த் தங்களுடன்
60) பங்காழி பண்டிக் குசவ ரொப்பந்தம் நடந்துகொள்
61) வராகவும் இந்த படிக்கு படணசாமி வரி சறுவ
மாணியப்பம
62) ாய் திருப்பணிக்கி வி(ட்)ட படியிநாலெ சந்திறாதிர
சந்

63) திரப் பிறவேசவரை(யு)ம் கல்லும் காவேரியும் புல்லு
64) ம் பூமியுமுள்ள வரைக்கும் சறுப மாணிப உம்பள
65) மாய்த் திருப்பணிக்கி முதலிட்டுக் கொண்டு வருவா
66) ராகவும் யிந்தப் படிக்கித் தெசத்தாருமருகிறாப்ப செட்டி
67) யா[ா]ரும் அழகப்ப செட்டியும் மென்பாந்தாங்கி வேள
68) ான் ஒட்டு உடையன் வேளான் நிம்ம செட்டி வேளான் சொ
69) க்கநாத வத்தியாருள்பட்ட நாலு தேசத்து உரவின் முரையா(ர்)
70) அனைவருக்கும் சருவ மானிப சாதனப் பட்டயம் எளு
71) திக் கொடுத்தோம் யிந்த தர்ம்ம காரியம் வரியிறை
72) க்கியாதாமொருத் தரடிமியளித்த துண்டானால் கெங்கக் க
73) ரையிலே காரம் பசுவை கொண்ட தோசத்திலேயும்
74) இந்தக் கரையிலே பிறாமணரைக் கொண்ட தோசத் திலே
75) யும் மாதாபிதாவைக் கொண்ட தோசத்திலேயும் போ
76) வாராகவும் யிந்தப் படிக்கி மீனாட்சியம்மன் சுந்த
77) ரேசுரர் காமாட்சியம்மன் மத்தியாய் மதுராபுரி
78) யில்க் கோவில்க் கணக்கு விளுப்பராய(ா)ர் சொல்ப்ப
79) டிக்கி மங்கபாக ஆசாரி எழுத்தனது உருத்திரப்ப
80) செட்டியார் அழகப்ப செட்டியார் ஒப்பம் உ.

குறிப்பு:- மடஅறங்காவலர் திரு. ஆர். முத்தழகன், கணக்கர் திரு. ஏழுமலை கொடுத்த தகவலின் பேரில் இச்செப்புப் பட்டயத்தைத் தொல்லியல் துறை மண்டல உதவி இயக்குநர் திரு. ச. ஹரிஹரன் ஆணையின் பேரில் தொல்லியல்துறை அதிகாரிகள் செ. போசு, பொ. இராசேந்திரன், வெ. வேதாசலம், சொ. சாந்தலிங்கம் ஆகியோர் ஆய்வுசெய்து இந்தச் செய்தியை வெளியிட்டு உள்ளனர்.

# 6

# தட்டாம்பாளையக் கல்வெட்டுகள்

**ச. கிருஷ்ணமூர்த்தி**
**தொல்லியல் அலுவலர்**

மாளிகைமேடு அருகில் உள்ள தட்டாம் பாளையத்தில் பழைய மாரிஅம்மன் கோயில் உள்ளது. சரியாக 100 ஆண்டுகளுக்கு முந்தைய கல்வெட்டொன்றும் மன்மத வருடக் கல்வெட்டொன்றும் உள்ளன. முதல் கல்வெட்டு வாயில் அருகே வலப்புறத்திலும் இரண்டாம் கல்வெட்டு கொடி மரத்திலும் உள்ளன. கல்வெட்டு களின் மூலங்கள் வருமாறு;

1) சிவமயம்
2) ௲௮௱00 ஸுக்கு சார்வரி
3) ஸு அர்ப்பிசி மீ
4) 11 உ அகிலாண்
5) ட கோடி பிரமாண்
6) டனாயகி ஆகிய மா
7) ரி அம்மன் கோவி
8) ல் சுத்து மதில் கோ
9) புர வாசகால் மட
10) ப்பள்ளி திருப்பணி
11) வேலை தட்டாம் பா
12) ளையம் கலிஞ்சி
13) வீராசாமி காவுண்
14) டர் குமாறன் மா
15) தவக் கவுண்
16) டர்ரில் கொல்லி

17) யங் கொளத்து மா
18) ரி அம்மன் தர்ம
19) வேலை நடத்தப்
20) பட்டது. யீஸ்பரி சு
21) ப்புராய காவுண்டர்க்கு
22) துணை செய்யவும்

இக்கல்வெட்டில் சூகூ00 என்று 1900 எழுதப்பட்டுள்ளது. 'அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி ஆகிய மாரி அம்மன்' என்று அம்மன் அழைக்கப்படுகிறார். கலிஞ்சி வீராசாமி காவுண்டர் மகன் மாதவக் கவுண்டர் திருப்பணி செய்துள்ளார். கொல்லியங்குளத்து மாரி அம்மன் என்றும் அம்மன் அழைக்கப் பட்டுள்ளார். கவுண்டர் என்ற சொல்லும் காவுண்டர் என்ற சொல்லும் வன்னியர்களுக்கு வழங்கப்பட்டமைக்கு இக்கல்வெட்டும் சான்றாகும்.

கொடி மரத்தில் உள்ள கல்வெட்டு:

1) ஸ்ரீ அகிலாண்ட கோடி
2) பிரம்மாண்ட நாயகி
3) கொல்லங் குணத்து மாரியம்ம
4) னுக்கு தட்டாம் பாளையம்
5) கி துரைசாமி கவுண்டரால்
6) செய்யப்பட்டது. து ஐஸதம்
7) பம் தர்மம் மன்மத வருஷம்
8) பங்குனி மாதம் 9 தேதி

இக்கல்வெட்டில் தற்போது வழக்கில் உள்ள 9 மற்றும் தலை எழுத்து உள்ளன. இதே ஊரில் அய்யனாருடைய பழைய சிற்பம் ஒன்றும் உள்ளது. கோயிலில் தற்போது திருப்பணி நடக்கிறது.

குறிப்பு:- திருமதி. சீ.வசந்தி அகழாய்வாளர் மற்றும் கோ.அர்ச்சுனன் கல்வெட்டாய்வாளர் ஆகியோர் களஆய்வின் போது உடன் இருந்தார்கள்.

# 7

# துளைப் பொன்

**முனைவர் சு. இராசகோபால்**
சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர்

சிக்கல் இல் சிறு கூதாளி.
நைந்தியின் திரட் பூ, சேர்ந்த
பொங்கு பொன்-துளை, என்றாலும்
புல்லிது பொது மைத்து ஆமால்
அங்கு அவள் உந்தி ஒக்கும் சுழி
எனக் கணிந்து உண்டால்
கங்கையை நோக்கிச் சேறி - கடலினும்
தெடிது கற்றோய்.

கம்பராமாயணத்தில் வரும் இப்பாடல் துளைப் பொன்னைப் பற்றிக் குறிப்பிடுகிறது. கெடுதல் இல்லாத சிறு வெள்ளரிப்பழம், அடுக்கு நந்தியாவட்டைப் பூ, பொங்குவது போன்ற துளையுடைய பொன் ஆகியவை சேர்ந்தது ஒரு பொதுத் தோற்றம்; என்றாலும் திண்மையானதல்ல, பூப்போன்று மென்மையானது சீதையின் உந்திச் சுழி என்று இராமன் அனுமனுக்கு சீதையின் அங்க அடையாளங்களைக் கூறுகின்றான். கன்பன் உந்திச் சுழிக்குச் சொல்ல வந்த உவமை துளைப்பொன். காசு இயலார் இதன் மூலம் துளைப்பொன் என்பது நல்ல அழகான பொன்னிற மேனியாளின் உந்திச்சுழி (தொப்புள்) போன்றது என்று அறிந்து கொள்ளலாம்.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரையில் துளைப்பொன் தமிழகக் கல்வெட்டுகளில் ஒரு செலாவணியாகக் காணப்படுகிறது. பொன்னின் நடுவே ஏன் துளை அமைகிறது? என்பதற்கு யூகமாக

ஒரு காரணம் குறிப்பிடலாம். திரு. வால்டர் எலியட் அவர்கள் தொன்மையான தங்க நாணயங்களைக் குறிக்கும்போது[2] அவை வழவழப்பாக உருண்டையான பொன்னாக இருந்தன. அவற்றில் இன்னதென்று இனம் காணமுடியாத முத்திரைகள் உண்டு. அவை 'பொன்' என்றே அழைக்கப்பட்டன என்று குறிப்பிடு கின்றார். இவர் குறிப்பிடும் முத்திரைகளே துளைகளாக ஆழப் பதிந்திருக்கக்கூடும். இவை ஒருவேளை துளைப்பொன்னாக இருந்திருக்கலாம். டாக்டர் சி. மீனாட்சி அவர்கள்[3] 'விடேல் வடுகு துளையிட்ட பொன்', துளைப்பொன் பற்றிக் குறிப்பிடும் பொழுது பொன்னின் தூய்மை மற்றும் கலப்படமில்லாத தன்மைக்குச் சான்றளிக்கும் வண்ணம் நடுவில் துளையிடப்பட்டது என்கிறார்.

'வடை மண் பொறி ஓலை விடேல் விடுகே'

என்று நந்திக்கலம்பகம், ரிஷப முத்திரையைக் குறிக்கிறது. சிறு சிறு பொற்கட்டிகளைச் செலாவணியாகப் பயன்படுத்தும்பொழுது ஒருவேளை அவை பொன் அல்லாமல் வேற்று உலோகங்களின் மேல் தங்கமுலாம் பூசப்பட்டு ஏமாற்றிவிட வாய்ப்புண்டு. இதனைத் தவிர்ப்பதற்காக நிர்வாகத்தினர் நன்கு சூடு செய்து முத்திரைகளையோ, அல்லது கம்பிகளையோ செலாவணிக்கு வரும் பொற்கட்டிகளின் நடுவே ஆழமாகப் பதித்து எடுத்து அதன் கலப்படமற்ற தன்மையைப் புலப்படுத்தும் வழக்கினைப் பின்பற்றி யிருக்க வேண்டும். அப்பொற்கட்டிகளே துளைப்பொன் என்று பெயர்பெற்றிருக்க வேண்டும்.

---

1. கம்பராமாயணம்; பாடல் 4486, கம்பன் கழகம், சென்னை-1976
2. Sir Walte. Elliot, Coins of Southern India, 1886 p. 53
3. Dr. C. Minakshi, Administration and Social Life under the Pallavas, p. 115, 1977

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

---

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை இயக்குநர் (பொ.) திரு. அ. அப்துல் மஜீத் அவர்களுக்காக
திருமதி. அர. வசந்தகல்யாணி கல்வெட்டாய்வாளரால் வெளியிடப்பெற்றது.